செ.வெ.எண்:64 நாள்:29.01.2019

# பத்திரிக்கை குறிப்பு

**கரூர் மாவட்டத்தில் கலைக்கப்பட்ட 5 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் தங்களது கணக்கில் உள்ள சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத் தொகைகளை பெற்றுக் கொள்ளலாம் என்று கரூர் சரக கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குநர் திரு.க.திருவாசகர் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டம் மணவாசி தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், திருவள்ளுவர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், சிந்தலவாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், கரூர் ஏற்றுமதி உற்பத்தி திட்டம், க.பரமத்தி தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகிய 5 கலைக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து, திட்டத் தொகையை இதுவரை பெற்றுக் கொள்ளாத உறுப்பினர்கள் உரிய ஆவணங்களுடன் கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், கதவிலக்கம் 121/5, வி.வி.ஜி நகர், வெங்கமேடு, கரூர் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்திலோ அல்லது தங்களது பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ கோரிக்கையை அளித்து சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட தொகையை பெற்று பயன்பெறலாம் என்று தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர், கரூர்.